# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## அல்லாஹ்வின் பண்புக் கூறுகள்

(பகுதி – 4)

10 April 2020

(16 Shabaan 1441 AH)

ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**

بسم الله الرحمن الرحيم

# *The Attributes of Allah* *(Pt.4)*

## அல்லாஹ்வின் பண்புக் கூறுகள் (பகுதி 4)

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்கள் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்.ஃ.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையை நிகழ்த்தினார்கள்.

அல்லாஹ்வின் அருளால் நான் ஒரு மாதத்திற்குப் பிறகு அல்லாஹ்வின் பண்புக்கூறுளைப் பற்றிய எனது வெள்ளிக்கிழமை பேருரையின் 4 –வது பகுதியைத் தொடர்கிறேன். நான் உங்களிடம் கூறியது போல், அல்லாஹ் பொய் சொல்லத் தேவையில்லை. அவன் மாலிக், ரஹ்மான் மற்றும் ரஹீமாக இருக்கின்றான். அதைப்போலவே அவன் அல்-ஹக்காகவும் இருக்கின்றான். மக்களை ஏமாற்ற மக்கள் தந்திரங்களையும் எல்லா வகையான மாயைகளையும் பயன்படுத்தும் போது அவன் உண்மையை தெளிவுப்படுத்தினான். ஹஸ்ரத் மூஸா நபி (அலை) அவர்களின் எடுத்துக்காட்டிலிருந்து அதை நாம் தெளிவாகக் கொண்டுள்ளோம்.

ஆகவே, திருக்குர்-ஆனை நாம் படிக்கும்போது, அது ஹஸ்ரத் தாவூத் (அலை அவர்களின் உதாரணத்தையும் குறிப்பிடுகிறது.

இரண்டு பேர் சுவர்களில் ஏறி ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்களின் கோட்டைக்குள் நுழைந்ததாக அல்லாஹ் கூறுகிறான். அவர்கள் அவனை நோக்கி : ஓ தாவூத் நீர் பயப்பட வேண்டாம், நாங்கள் திருடர்கள் அல்லது கொள்ளையர்கள் என்று நினைக்க வேண்டாம், சத்தம் போடுவது உங்களுக்கு எந்த நன்மையும் செய்யாது. நாங்கள் வழக்காளிகளான இரண்டு பிரிவினர்களாவோம். உண்மையில், நாங்கள் உங்களிடம் ஒரு வழக்கை முன்வைக்க வந்தோம். இவர் என் சகோதரர் ஆவார். இவருக்குத் தொண்ணூற்றொன்பது (99) பெண் ஆடுகள் இருக்கின்றன. எனக்கு ஓர் ஆடு மட்டும் தான் இருக்கிறது. என்றாலும் அதனைத் தனக்குக் கொடுத்து விடு எனக்கூறுகிறார். அதனால் அது 100 எண்ணிக்கையை உருவாக்கும். ஆனால் நான் அவரிடம் : நான் ஒன்று மட்டுமே வைத்திருக்கிறேன். அதை உங்களிடம் கொடுக்க முடியாது என்று சொன்னேன். எனவே என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.

ஆகவே, ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கள் நீதியுடன் தனது தீர்ப்பை வழங்கினார். ஆனால் இந்த அனுபவத்தின் அடிப்படையில் அவர், அல்லாஹ் உண்மையில் தன்னை சோதிக்கிறான் என்று விரைவில் புரிந்து கொண்டார். உடனடியாக அவர் ஸஜ்தாவில் வீழ்ந்து அல்லாஹ்விடம் திரும்பி கொண்டார். அல்லாஹ் நிச்சயம் அவரைச் சோதித்து, தனது ராஜ்யத்தில் சேர்க்க சிறிய ராஜ்யங்களைப் பெறுவதற்கான அவருடைய பேராசைக்கு எதிராக எச்சரித்தான். அருகிலுள்ள ராஜ்யங்களுக்கு அழுத்தம் கொடுக்காமலும் வரம்பு மீறிய செயல்களை செய்யாமலும் கவனமாக இருக்க வேண்டும் என்று அல்லாஹ் அவருக்கு புரிய வைத்தான்.

இந்த வசனத்தை தவறாகப் புரிந்து கொண்ட வர்ணனையாளர்கள் உள்ளனர். அவருக்கு 99 மனைவிகள் இருப்பதாகவும், அவர் மற்றொரு பெண்ணைக் கூட அடைய விரும்புவதாகவும், இதனால் பெண்களின் எண்ணிக்கையை 100 ஆகக் கொண்டுவரும் என்று அவர்கள் விளக்கமளிக்கின்றனர். ஆனால் இவை அனைத்தும் உண்மையில் மிகைப்படுத்தல் தான் என்பதில் சந்தேகமில்லை. உண்மையில் அவர் ஒரு அரசர் என்றும் அந்த மிக விரிவான ராஜ்யம் அவருக்கே உரியது என்றும் அவர் விரும்பினால், அவர் விரும்பிய அனைத்து அழகான பெண்களையும் அவர் பெற்றிருக்க முடியும் என்று உங்களுக்கு தெரியாதா? ஏனென்றால் அந்த நேரத்தில் அரசருக்கு மிக உயர்ந்த மேன்மை இருந்தது. எனவே, இந்த வர்ணனையாளர்கள் தங்கள் கண்களை மூடிக்

கொண்டுள்ளனர். அவர்கள் பைபிளின் கூற்றை ஏற்றுக்கொள்கிறார்கள். இவை அனைத்தும் முற்றிலும் கற்பனையானவை.

உண்மையில் இது, அல்லாஹ் தனக்கு மிகப்பெரிய ராஜ்யங்களைக் கொடுத்துள்ளான் என்பதை அவருக்குப் புரிய வைப்பதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்களுக்கு வழங்கிய ஒரு அறிவுரையாகும். இந்த பெரிய ராஜ்யங்களுக்கு அருகிலேயே, சிறிய நாடுகள் இருந்தன. அரசர்கள் அந்த சிறிய ராஜ்யங்களை கைவசப்படுத்தி தங்கள் ராஜ்யத்துடன் சேர்ப்பதற்கான பேராசைகளுடன் இருந்தன. இன்றும் கூட, சிறிய தீவுகளில் தங்கள் கண்களைக் கொண்டிருக்கும் நாடுகள் உள்ளன, இராணுவ தளங்களாக செயல்பட அவற்றை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்று அத்தகைய நாடுகள் எண்ணுகின்றன. பல சிறிய நாடுகளை அவர்களின் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதையும் நாம் காண்கிறோம். இது ஒரு நல்ல விஷயம் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். ஆனால் இந்த வகை பேராசையானது சில நேரங்களில் அவர்களை அநீதியின் பக்கம் அழைத்து செல்கிறது.

இதைப் பற்றி பேசுகையில் அரபு நாட்டில் எனது சீடர்களில் ஒருவர் ஹஸ்ரத் சாலிஹ் நபி (அலை) அவர்களின் காலத்தில் ஏற்பட்ட ஒரு வெடிப்பு பற்றி நான் என்ன கூறியிருந்தேன் என்பது குறித்து ஒரு கேள்வியை என் முன்வைப்பது எனக்கு வசதியாக உள்ளது. 27 மார்ச் 2020 அன்றைய எனது வெள்ளிக்கிழமை பேருரையில் நான் குறிப்பிட்டதை மீண்டும் மேற்கொள் காட்டுகிறேன்.

**இறைத் தண்டனையின் இரண்டாவது சிறப்பியல்பு என்னவென்றால் அது ஒரு குறிப்பிட்ட நிபந்தனைக்கு உட்பட்டதாக இருக்கும். இது பூமி அல்லது ஆகாயத்திற்குரிய பேரழிவின் நேரடி காரணம் அல்ல. இது சுயம் வெளிப்படுகிறது.**

**சமூத் கோத்திரத்திற்கு அனுப்பப்பட்ட ஹஸ்ரத் சாலிஹ் (அலை) அவர்களின் காலத்தின்போது ஒரு பயங்கரமான வெடிப்பு ஏற்பட்டது. ஆனால் அந்த வெடிப்புக்கும், அம்மக்கள் பெண் ஒட்டகத்தின் கால்களை துண்டித்தார்கள் என்பதற்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை.**

அல்லாஹ் எனக்கு கொடுத்த அறிவின் படி நான் இங்கே உங்களுக்குப் புரியவைக்கிறேன். இது புனித குர்-ஆனில் சூரா அல் அரா.்.ப் மற்றும் அல்-கமறிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிச்சயமாக அந்த பெண் ஒட்டகம் அல்லாஹ்வுடையது தான், அந்த பெண் ஒட்டகம் எல்லோரையும் போலவே அதற்குத் தேவையான நேரத்தில்

தண்ணீரைக் குடிக்கத் திரும்பியது. ஆனால் கர்வங்கொண்டவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறு செய்தனர். ஒட்டகம் வந்தவுடன் அவர்கள் தண்ணீரைக் குடிக்க விடவில்லை. அவர்கள் அப்பெண் ஒட்டகத்தை தாக்கினர். மேலும் அவர்கள் அதன் கால்களைத் துண்டித்தனர். அதைத் தொடர்ந்துள்ள வசனங்களில் ஒரு பெரிய வெடிப்பு அல்லது ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு அவர்களை தங்கள் வீடுகளில் வைத்தே அல்லாஹ் அழித்துக்கொண்டான்.

**நான் கூறியது போல் அவர்கள் அந்த பெண் ஒட்டகத்தை தாக்கி, அதன் கால்களை துண்டித்தது இந்த தண்டனைக்கு நேரடி காரணம் அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.** உண்மையில் இது சுட்டிக்காட்டுவது அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் இருந்தனர். அவர்களின் வரம்புமீறல் மற்றும் கீழ்ப்படியாமைகள் பல வருடங்களாக தொடர்ந்து வந்தது. அதனால் அவர்களின் பாவங்கள் குவிந்து கிடந்தன. அந்த பெண் ஒட்டகத்தின் கால்களை துண்டித்தது அவர்களின் வரம்புமீறிய செயல்களில் ஒன்று மட்டும் தான். அதற்கு பின்தான் தண்டனை இறங்கியது. **இந்த தண்டனைக்கு நேரடி காரணம், அவர்கள் அந்த பெண் ஒட்டகத்தின் கால்களை துண்டித்த நடவடிக்கை மட்டுமல்ல.** அல்லாஹ் எதிர்பாராதவிதமாக ஒரே அடியில் தண்டிப்பதில்லை. அல்லாஹ்வுக்கான கீழ்ப்படியாமையின் அனைத்து வரம்புகளையும் அவர்கள் தாண்டியபோது தான் தண்டனை இறங்கியது. பல ஆண்டுகளாக ஹஸ்ரத் சலிஹ் (அலை) அவர்களின் மக்கள் தங்கள் கீழ்ப்படியாமையின் காரணமாக பாவங்களை குவித்திருக்க வேண்டும், இல்லையென்றால் அல்லாஹ் அவர்களை தண்டித்திருக்க மாட்டான். அவன் மனந்திரும்புவதற்கு போதுமான நேரத்தை ஒரு நபருக்கோ அல்லது ஒரு சமுதாயத்திற்கோ அல்லது மனித குலத்திற்கோ வழங்குகிறான். பல ஆண்டுகளாக அம்மக்களின் கீழ்ப்படியாமைதான் அவர்களுக்கு இந்த பெரிய தண்டனையை கொண்டு வந்தது. மேலும் அந்த பெண் ஒட்டகத்தின் கால்களை துண்டித்ததன் மூலம் கர்வம் மற்றும் கீழ்ப்படியாமையின் வரம்பை மேலும் அவர்கள் மீறி கொண்டனர். எனவே, அதனால்தான் நான் சொன்னேன். இறைத்தண்டனையின் இரண்டாவது சிறப்பியல்பு என்னவென்றால் அது ஒரு குறிப்பிட்ட நிபந்தனைக்கு உட்பட்டதாக இருக்கும். இது பூமி அல்லது ஆகாயத்திற்குரிய பேரழிவின் நேரடி காரணமல்ல. **(அதாவது இந்த நிபந்தனையானது பூமியில் நின்றோ, ஆகாயத்தில் நின்றோ தோன்றும் பேரழிவுகளுக்கு நேரடியான காரணமல்ல. அதாவது சமூத் கோத்திர மக்கள் அந்த பெண் ஒட்டகத்தின் கால்களை துண்டித்தது அந்த நிலநடுக்கத்திற்கான நேரடி காரணமல்ல).** இது தானாகவே வெளிப்படுகிறது.

இக்கூறிய நிபந்தனை இதுவாகும். சாலிஹ் நபி (அலை) அவர்களின் மக்கள் அல்லாஹ்வுடையவும் அவரது நபியுடையவும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருந்தால், (அதாவது அவர்கள் அந்த பெண் ஒட்டகத்தை தண்ணீர் குடிக்க அனுமதித்திருந்தால்) அதன் கால்களை தண்டிக்காமலிருந்திருந்தால், அவர்கள் அவநம்பிக்கையாளர்களாக இரந்தாலும் கூட அவர்கள் இந்த தண்டனையைப் பெற்றிருக்க மாட்டார்கள். ஆனால் பல வருடங்களாக அவர்கள் செய்து குவித்த பாவங்கள் காரணமாகத் தான் அவர்கள் தண்டனைக்கு ஆளாகிவிட்டார்கள்.

நான் உங்களுக்கு விளக்கிய ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்களின் விஷயத்தைப் போலவே, தனது அறைக்கு வந்த இந்த இரண்டு பேரின் முன்னிலையிலும் அல்லாஹ் அவரை சோதித்தான். நாம் இங்கு கணக்கிட வேண்டியது, இந்த இரண்டு நபர்களின் வருகை மற்றும் அவர்களின் கதை இவையாவும் அல்ல. மாறாக அல்லாஹ் முன் வைத்த சோதனையும் அதன் மூலம் ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்களுக்கு அவன் கற்பிக்க விரும்பிய பாடமும் தான். திருக்குர்-ஆனிய கணக்கில் இது மிக முக்கியமானது. இது உண்மையில் ஒரு சோதனை மற்றும் அல்லாஹ் தனக்கு கற்பித்த ஒரு சிறந்த பாடம் என்பதை ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கள் புரிந்துக் கொண்டார். இந்த உலகப் பொருள் மீது பேராசைப் படக்கூடாது என்பதை அல்லாஹ் அவருக்கு புரிய வைத்தான். அல்லாஹ் தனக்கு கொடுத்தவற்றில் அவர் திருப்தியடைய வேண்டும். இல்லையெனில், அல்லாஹ்வின் கலீ∴பா என்ற முறையில், அவர் தனது வேலையைச் சரியாகச் செய்திருக்கமாட்டார். ஆனால் இந்த இரண்டு நபர்களுக்கிடையில் ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கள் நீதியுடன் தீர்ப்பளித்தபோது இந்த தீர்ப்பு உண்மையில் தனக்குத் தானே பொருந்தும் என்பதை அவர் உடனடியாக புரிந்து கொண்டார்.

எனவே, எனது பேருரையின் விஷயத்திற்குத் திரும்புகிறேன். அல்லாஹ் முழுமையாக எஜமானன் என்பதால் அவன் பேராசை கொண்டவனாக இருக்கத் தேவையில்லை. அல்லது பொருட்களைப் பெறுவதற்கான எல்லா வகையான தந்திரங்களும் திட்டங்களும் மேற்கொள்ள அவசியமில்லை. மேலும் அவன் பொய் சொல்வதற்கு அப்பாற்பட்டவன், அநீதிகளைச் செய்வதில் அவனுக்கு எந்தப் பயனும் இல்லை.

இங்கு அல்லாஹ் தனது எஜமானனின் பண்புகளை சத்தியத்தின் பண்புடன் இணைத்துள்ளான். மேலும் இவ்விஷயத்தை நான் விரிவாக விளக்கும் போது, இன்னும் சில சுவாரஸ்யமான விஷயங்கள் வெளிச்சத்திற்கு வரும். சத்தியம் என்ற பண்பினை

எஜமானன் என்ற பண்புடன் ஏன் அல்லாஹ் இணைத்தான்? உண்மையில் இதற்கான காரணம் நான் உங்களிடம் கூறியது போலவே உள்ளது.

மாலிக் (எஜமானன்) என்ற சொல்லுக்கு பொருள் மற்றும் சொத்துடன் ஒரு தொடர்பு உள்ளது. ஒரு நபர் எஜமானராக இருந்தால், அவர் ஒருவருக்கு எதையாவது கொடுத்து, இன்னொருவருக்கு எதையும் கொடுக்கவில்லை என்றால், அந்த செயலை அநீதி என்று சொல்ல முடியாது. எவருக்கு வேண்டுமானாலும் அவருக்கு கொடுக்கமுடியும். ஏனெனில் அவர் எஜமானராக இருக்கிறார், இப்பொருட்கள் அனைத்தும் அவருக்கு சொந்தமானது. இதை ஒரு அநீதியாக தரப்படுத்த யாருக்கும் உரிமை இல்லை. அவர் விரும்புவோருக்கு கொடுக்க அவருக்கு எல்லா உரிமைகளும் உள்ளன. ஆகவே அவர் இந்த நபருக்கு கொடுத்தார். ஆனால் எனக்கு எதுவும் கொடுக்கவில்லை என்று யாருக்கும் சொல்ல முடியாது.

எனவே, இது அறியாமையன்றி வேறு எதுவும் இல்லை. உண்மையில் நீதி அல்லது உண்மை என்னும் பண்புடன் இதற்கு எந்த தொடர்பும் இல்லை. ஆனால் இதற்கு எஜமானன் என்னும் பண்புடன் தொடர்பு உள்ளது. திருக்குர்-ஆன் இது பற்றி குறிப்பிட்ட எல்லா இடத்திலும் மாலிக் என்ற பண்புடன் இணைத்துக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறிருந்தபோதிலும், சூரா:அல் பாத்திஹாவில் இவை அனைத்தும் உள்ளன. ஏனெனில் மாலிக் யவ்முத்தீன் இரண்டுக்கும் பொருந்தும். அல்லாஹ் தான் முடிவுகளை எடுக்கின்றான், அவனே நீதிபதியாகவும் எஜமானனாகவும் இருக்கின்றான். எனவே, நான் கூறியது போல் அல்-ஹக் என்ற சொல் சூரா அல் - பாத்திஹாவில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பண்புகளுடனும் இணைக்கப்பட்டுள்ளது.

ஆகையால், சூரா அல்.ஃ. பாத்திஹா அல்லாஹ்வின் பண்புகளின் தாய் என்பதை நமக்கு உறுதி செய்யலாம். இது குர்-ஆனின் தாய் போலவே அது அல்லாஹ்வின் அனைத்து பண்புப் பெயர்களுடையவும் தாய் ஆகிறது. அல்லாஹ்வின் பண்புப் பெயர்கள் புரிந்துகொள்ள, நீங்கள் சூரா அல்.ஃ.பாத்திஹாவை மிக ஆழமாக படித்துக்கொள்ள வேண்டும். பின்னர் அவ்விஷயம் மிக தெளிவாகிவிடும்.

இப்போது நான் இந்த விஷயத்தை வெவ்வேறு அம்சங்களிலும் வெவ்வேறு கோணங்களிலும் விளக்கப்பட்டிருக்கும் வசனத்திற்கு வருகிறேன். இதுவரை நான் அல்-ஹக் என்ற சொல்லை குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தேன். இதில் மக்கள் ஏன் பொய் சொல்கிறார்கள் என்பதை நமக்கு

அல்லாஹ் புரிய வைக்கின்றான். இதன் வெளிச்சத்தில் பார்த்தால் அல்லாஹ்வின் ஹக் என்னும் பண்பு சூரா அல்.ஃபாத்திஹாவில் குறிப்பிடப்பட்டுள்ள பண்புகளுடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவாகக் காணலாம். அந்நிலையில் இந்த குணங்களைக் கொண்ட ஒரு நபர் ஒரு போதும் பொய் கூறுபவராக இருக்க முடியாது என்பதை 100% நிரூபிக்க முடியும். பொய்யுடன் எந்த தொடர்பும் அதற்கு இருக்க சாத்தியமில்லை. பொய்யின் அனைத்து அம்சங்களையும் முழுமையாக நிராகரிக்கும் ஒன்றாக இருப்பதால்தான் அவனை அல்-ஹக் என்று அழைக்கப்படுகிறது. தொலைதூரத்திலிருந்து கூட பொய்களுடன் எந்த தொடர்பும் இல்லாத பரிபூரண மற்றும் முழுமைபெற்ற உண்மை - அல்-ஹக்.

இப்போது அல்லாஹ் ஹக் என்ற வாரத்தையை குறிப்பிட்டுள்ள எந்த இடத்தை நீங்கள் பார்த்தாலும், அதிலிருந்து உங்களுக்கு உங்கள் வாழ்க்கை முறைகளை மேன்படுத்த உதவியான வெளிச்சத்தை பெற முடியும். நீங்கள் அல்லாஹ்வை ஹக் என்று புரிந்துக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் (அந்த பண்பை) உங்கள் வாழ்க்கையில் முழுமையாக பயன்படுத்த விரும்புவீர்கள். நிச்சயமாக நீங்கள் அதிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று உள்ளது - நீங்கள் சத்தியத்தின் அனைத்து அம்சங்களையும் இழந்து விட்டவர்களாகயிருந்தால் - அந்நிலையில் உங்களுக்கு அதிலிருந்து எதையும் பெற முடியாது. அதாவது உங்களுக்கு சத்தியத்துடன் எந்த தொடர்பையும் கொண்டிருக்க முடியாது. ஒரு தொடர்பு இருக்க வேண்டுமென்றால், ஒத்துழைப்பு இருக்க வேண்டும், ஒத்துழைப்பு இல்லை என்றால் தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்படும். ஒரு நபர் அல்லாஹ்வின் பண்புகளுடன் தனது தொடர்பை முழுமையாக துண்டித்துவிட்டால், இந்த பண்புகளின் அனைத்து நன்மைகளையும் அவர் இழக்க நேரிடும். ஆகவே, சத்தியம் தொடர்பாக குர்-ஆன் குறிப்பிட்டுள்ள உண்மை என்ன, மேலும் அதில் என்ன நன்மைகள் உள்ளன என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் உடனடியாக புரிந்து கொள்ளக்கூடிய சில குறிப்பிட்ட நன்மை இருக்கிறது. இதற்காக, நான் ஒரு சில வசனங்கள எடுத்துக் காட்டுகளாகத் தேர்ந்தெடுத்துள்ளேன். நேரக்குறைவு காரணம் இரண்டு வசனங்களைப் பற்றி மட்டுமே பேச முடியும்.

ஆரா : அல் அன்ஆமில் - 62, 63 வசனங்களில் அல்லாஹ் கூறுகிறான்.

**“அவன் தன் அடியார் மிகைத்தவனாவான். அவன் உங்களுக்கு பாதுகாவர்களை அனுப்புகின்றான். உங்களுள் எவருக்காவது மரணம் வரும்போது, நம் தூதர்கள் (அதாவது கைப்பற்றுகின்றனர்.அவர்கள் அதில் தவறுவதில்லை. பின்னர் அவர்களுடைய**

**உண்மையான எஜமானனாகிய அல்லாஹ்விடம் அவர்கள் திரும்பக் கொண்டு செல்லப்படுவார். கேளுங்கள்! தீர்ப்பு அவனுக்கே உரியது. மேலும் அவன் விரைவில் கணக்கெடுப்பவனாவான்".**

அவன் தன் அடியார்களிடத்து மிகைத்தவனாவான் என்று இந்த வசனங்களில் அல்லாஹ் கூறுகின்றான். மிகைத்தவன் என்ற சொல் பயன்படுத்தப்படும்போது, உங்கள் கவனம் எதிர்மறையான அம்சங்களுக்குச் செல்கிறது. ஆனால் உண்மையில் மிகத்தவன் என்ற சொல் முழுமையான ஆற்றல் பெற்றவன் என்று கூறலாம். தான் விரும்பினால் தண்டிக்கக் கூடிய ஒரு நபர். அவருக்கு நிச்சயமாக திறன் மற்றும் தண்டிக்கும் சக்தி உள்ளது. அதைப்போலவே அவன் விரும்பினால் மன்னித்துவிடுவான். தான் விரும்பியவற்றைச் செய்கிறவன்.

எனவே முழுமையான சக்தி மட்டும் கட்டுப்பாடு இருக்கும் நபரை, நாம் (உயர் அதிகாரி) என்று கூறுகிறோம். மனித அரசியலிலும் இந்த சொல் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. மற்றொன்றை பயப்படும் ஒன்றுக்கு இந்த சொல் பொருந்தாது. உதாரணமாக, சிறிய நாடுகளுடன் அனுதாபம் காட்டும் பெரிய சக்திகள் உள்ளன. ஏனென்றால் ஒவ்வொன்றும் மற்றொன்றுக்கு அஞ்சுகிறது. இந்த பயம் எப்போது உடைக்கப்படுகிறதோ அப்போது மேலாதிக்கம் அநீதிகளின் வடிவத்தில் வெளிவருகிறது. ஆயினும் கூட இந்த மேலாதிக்கம் எப்போதும் இருந்தது. ஒன்றுக்கொன்று பயம் இருப்பதால் அதை யாரும் பார்க்கவில்லை. பயம் விலகிய போது மேலாதிக்கம் வெளிப்பட்டது. ஆகவே, அல்லாஹ் தொடர்பாக மிகைத்தவன் (உயர் அதிகாரி) என்ற சொல் குறிப்பிடப்படும் போது, அவன் விரும்பினால், எல்லாவற்றையும் அழிக்க முடியும் என்று பொருள். இது குறித்து அவனிடம் கேள்வி எழுப்ப யாருக்கும் முடியாது.

ஆனால் அவன் ஹமீத் ஆக கூட இருப்பதால், அவனுக்கு திறன் இருந்தாலும், அவன் மக்களை அழிப்பதில்லை. சில சமயங்களில் மக்கள் அத்தகைய நிலைக்கு வருகிறார்கள். அவர்கள் உண்மையில் தண்டனைக்கு தகுதியானவர்கள். ஆனாலும் அவர்களை அழிக்கமாட்டான். அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் செய்யும் பாவங்களுக்காக எல்லா மனிதர்களையும் அழித்திருக்க முடியும். ஏனெனில் மனிதர்கள் பாவங்களில் மூழ்கியிருக்கிறார்கள். ஆனால் அவன் தனது எதிர்மறையான முகத்தை காட்டாமல் தனது நேர்மறையான முகத்தை மட்டுமே காட்டுகிறான். இது ஒன்றோ இரண்டோ பேருரைகள் மூலம் சொல்லி முடிப்பதற்கான சிறிய விஷயமல்ல. நிச்சயமாக இது விரிவானதும் ஆழமானதுமான விஷயம். அல்லாஹ்வின் பண்புக்கூறுகளை

விளக்குவது எளிதல்ல. இன்ஷா அல்லாஹ், அடுத்த வெள்ளிக் கிழமை இதே விஷயத்தை தொடர்ந்து கொள்வதற்கான திறனையும் வாய்ப்பையும் இந்த எளிய அடியானுக்கு அல்லாஹ் வழங்குவானாக! இன்ஷா அல்லாஹ், அல்லாஹ் நம் ஒவ்வொருவரையும் சரியான பாதையில் வழி நடத்துவதோடு, மனித குலத்தின் நலனுக்காக அவனுடைய செய்திகளையும் எச்சரிக்கைகளையும் புரிந்துகொள்ள உதவி புரிவானாக! இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by:**

Naib Amir *Azim Ahmad*


**Editing & Publishing are done by**
***AMIR***
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**TAMIL NADU**
**Ph No: 917502272774**